மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.1 ஆறுமுகம்

28.07.2023: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:– 1) எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எங்களது நிலங்களை அனுபவம் செய்வதில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். பொதுக்கிணற்று தண்ணீரையும் தனிக்கிணற்று தண்ணீரையும் அவரவர் நிலங்களுக்கு எடுத்துச்செல்வதற்காக பொதுப்பாதையின் அடியில் நிலத்தடி நீர் குழாய் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வடக்கில் உள்ள நிலம் பள்ளமாகவும், தெற்கில் உள்ள நிலம் மேடாகவும் இயற்கையாக அமைந்துள்ளது. மேற்படி நிலத்தடிக்குழாய் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. தனிக்கிணறு அமைக்கப்பட்டு சுமார் 4 ஆண்டுகள் இருக்கும்.

2) எனது நிலத்திற்கு நான் தனிப்பட்டா வாங்கியுள்ளேன். பிரதிவாதிகள் உட்பிரிவு செய்துகொள்ளவில்லை. கடந்த 2012ம் ஆண்டே நிலத்தடிக்குழாய் அமைக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 2012ம் ஆண்டு முதல் நிலத்தடிக்குழாய் மூலம்தான் தண்ணீர் கொண்டு சென்று பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். பாகவிஸ்தி ஆவணத்தில் வாய்க்கால் பாத்தியம் சொல்லப்பட்டிருந்த போதிலும் இரு தரப்பிற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 2012ம் ஆண்டு முதல் வாய்க்கால் பூமியில் இல்லை என்றால் சரியல்ல.

3) நான் வீணாக வாய்க்கால் இருப்பதாக பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பொதுக்கிணற்றிலிருந்து எங்கள் இடத்தின் வழியாக வாய்க்கால் உள்ளதா என்றால் அதனை அழித்து பாதையாக மாற்றி விட்டோம். பொதுப்பாதையில் எங்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. பொதுப்பாதையின் அகலம் 4 மீட்டர் என்றால் சரிதான். 4 மீட்டருக்கு குறைவாக இருந்தால் நான் ஆக்கிரமிப்பை எடுத்துக்கொள்வேனா என்றால் கோர்ட்டு எடுத்துக் கொள்ளட்டும். 1ம் பிரதிவாதியின் நிலத்தில் ஆக்கிரமிப்பு இருந்தால் எடுத்துக்கொள்ள தயார் என்றால் நானும் எடுத்துக்கொள்ள தயாராக இருக்கிறேன். தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.07.28 16:15:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.